**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம்.சி.ஓ.பி.எண்.84/14 நாள்.08.02.2021**

2021-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 08-ம் நாள் மனுதாரர் தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூங்காவனம் | தொழில் | |
| த.பெ/க.பெ. | முனுசாமி | சாதி | |
| கிராமம் | கஞ்சமலை புரவடை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 50 |

**ம.சா.1**
**4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்துபோன எனது மகன் திருமலா பால் நிறுவனத்தில் பணியாற்றியதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் சாலை விபத்தில் இறந்துவிட்டார் என்ற விவரம் எனக்கு கேள்விபட்டுதான் தெரியும். எனது மகன் 3ம் எதிர்மனுதாரர் புஷ்பராஜன் கிரானைட் அன்டு டைல்ஸ் நிறுவனத்தில் வேலை எதுவும் செய்யவில்லை, திருமலா பால் நிறுவனத்தில்தான் வேலை செய்தார். விபத்திற்கு காரணம் முன்பு சென்று பெரிய லாரி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மகன் இறப்பிற்கு காரணமான பெரிய லாரி மற்றும் அதன் காப்பீட்டு நிறுவனம்தான் எனக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரிதான்.